Minutes of the Public hearing conducted for the M/s. K.Ilayaraja Rough Stone Quarry at S.F.No. 619(P), Karungalakudi Village, Melur Taluk, Madurai District and M/s. K.Ilayaraja Rough Stone Quarry at S.F.No. 63 Ayyapatti Village, Melur Taluk, Madurai District on 07.02.2023 at 11AM in M/s. M.N.P. Tirumana Mahal, Trichy Main Road, Pattamangalampatti Vilakku, Karungalakudi, Melur Taluk, Madurai District.

Present:

Thiruvalargal:

1	Dr. S. Aneesh Sekhar	:	District Collector Madurai District
2	Divyansu Nigam	:	Assistant Collector (Training) Madurai District
3	Dr.K.Firthouse Fathima	:	Revenue Divisional Officer Melur Taluk, Madurai District
4	Aarlius Rebony	:	Deputy Superintendent of Police Melur Taluk, Madurai District
5	G.Ramaraj	:	District Environmental Engineer TamilNadu Pollution Control Board Madurai District

6	R.V.Padmashani	:	Assistant Environmental Engineer TamilNadu Pollution Control Board Madurai District
7	G.Usha Rani	:	Assistant Engineer TamilNadu Pollution Control Board Madurai District
8	Project Proponent and public	:	As per Attendance Register (Copy of Register is enclosed)

District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai

The District Environment Engineer welcomed the Respected District Collector, Assistant Collector, Revenue Divisional Officer, Deputy Superintendent of Police, Government Officials, General Public, Press persons, Proponent and consultant of the project who have come for the meeting being conducted for getting environmental clearance for M/s. K.Ilayaraja Rough Stone Quarry.

The public hearing meeting for M/s. K.Ilayaraja Rough Stone Quarry at S.F.No. 619(P), Karungalakudi Village, Melur Taluk, Madurai District and M/s.K.Ilayaraja Rough Stone Quarry at S.F.No. 63, Ayyapatti Village, Melur Taluk, Madurai District is being conducted based on EIA Notification dated:14/09/2006 published by Ministry of Environment and Forest Climate

Change New Delhi.

Press release containing details of this public hearing meeting was published in Daily Thanthi and The Times of India newspapers dated on 30.12.2022. In this regard, District Environmental Engineer, requested to express their views one by one in apeaceful manner and also it in writing.

Further, District Environmental Engineer asked the project consultant topresent the project details.

Project Consultant:

Project Consultant explained the detailed report of the project ofM/s. K.Ilayaraja Rough Stone Quarry.

1.Thiru.Parasuraman, Karungalakudi:

He stated that this project is important for public and labours. There will not be any problem due to this project. There are thousands of people in Karungalakudi village depending on this occupation and the operation of the quarry will not cause any damage. This project has to come to develop this village as town panchayat.

2.Thiru.Veeratamil selvan, Pattamangalampatti Vizhakku:

He stated that quarrying activities are being carried out in our village for a long time. All buildings shall be constructed using the foundation stones.

If foundation stones are not used, the lifetime of buildings will be lesser. There will not be any pollution due to this project. People will get employment opportunities. This project will be helpful for the development of this area.

3.Thiru.Balamurugan, Thambattapparai:

He stated that people of this area will get employment opportunities due to this project.

4.Thiru. S. Anbazhagan, S.Malampatti:

He stated that he is a graduate and he was depending on agricultural activity and has suffered due to low income. Now, due to such quarrying projects, there is growth in the village and the youngsters in surrounding villages are getting employment opportunities. Eventhough there is little environmental damages, we are welcoming this path of economical growth.

5. Thiru. Ukkirapandiyan, S.Malampatti:

He stated that there are 10000 families are without any employment. Previously, there was granite related occupation in this area. Now, there will be a possibility of direct, indirect employment opportunity due to this project and hence welcoming the project.

6.Thiru. Rajendiran, Kambur:

He stated that poromboke quarries in this area are not functioning for the

past 5 years. We have given petitions to the Government officials in this matter. He requested that Government shall take incharge and run all such poromboke quarries to protect the livelihood.

7.Thiru. Annadurai, Madurai (Arappalayam):

He stated that there are only 10 documents with the draft EIA report inrespect of S.F.No. 63 of Ayyapatti village instead of 40 documents and it shall be ensured that such kind of mistakes shall not happen in future. Further, as per Rules, there shall be an gap of 10m from the cart track.

He also stated that it is mentioned in studies conducted for Air, Soil, Water, biodiversities are in short in the TOR and hence this report is against the law.

8.Thiru. Selvaraj, Kambur,

He stated that request has been placed before Government for implementation of Periyar Canal scheme for this area and future generations will be affected due to quarrying activities and he is taking action to protect agricultural activities in this area. He also stated that permission is being granted against the Mining rules . It is acceptable if the quarrying activity takes place abiding the rules; but permission is being granted without considering the existence of habitations, kanmoi, pond.

Further, stated that a petition was given to the District Collector stating that some other quarry related documents was uploaded in the TNPCB web site regarding this public hearing and TNPCB has corrected the same

immediately and hence thanked.

He also added that there are many water bodies located surrounding the quarrying site and it is clearly shown in village map. In TOR and Executive Summary report, it is mentioned that studies for Air, Soil, Water, biodiversities were conducted from 01.03.2021 to 01.05.2021. but it could not be accepted saying that these are all done before 100 days.

There are many water bodies are located in the proposed quarry area and the same is clearly mentioned in the village map.

There are 30 enclosures have not been enclosed and hence requested not to grant permission to this project. He also stated to give permission for quarries in Melur area if they are complying the rules. Environment is important for the wellbeing of families.

9.Thiru. Azarudeen, NGO, Sekkipatti Panchayat:

He stated that this occupation is the livelihood of people. There will not be any possibility of fraudulence due to this project and the government shall rectify deficiencies and consider the approval.

10. Thiru. Thangam Adaikkan, ChinnaKarpoorampatti:

He stated that this project is illegal. Pond, cart tracks are located in the vicinity. Public hearing is conducted without showing this details. Agriculture is getting affected due to this type of schmes. 1% of people are getting benefitted, 99% of people are getting affected. 99% of people in this area

depending upon agriculture, cattle growth and this public hearing shall be cancelled. There are many birds in this area, especially in nearby Arittapatti and hence informed to cancel the permission.

11. Thiru. Saravanan, Veerasoodampatti:

He stated that there will be economic growth due to this project and Cattle growth is good here. Further, welcomed the project.

12. Thiru. Jeeva, Kesampatti:

He stated that we are opposing the quarries which are violating the rules only. The ground water level has gone very low and has been given red alert for this area. Agriculture could not be done in this area even the periyar canal scheme water comes if quarries were operated. 200 persons may get employment due to this project but there will not be food for 10000 persons. Government shall regulate the 100days employment scheme and shall improve the economic condition. Nature shall be protected. Biodiversity and 'Devangu' are in extinction. Permission may be granted to the quarries only if they abide the rules.

13. Thiru. Ravi, NGO, Othakadai:

He stated that the quarry is proposed nearer to water bodies, cart track against the rules and regulations. Agriculture and 100 days employment schemes shall properly be implemented. There is a possibility of earth quake, natural

disasters due to break down of hills and livelihood of people will get affected. We have to think about our future generations. There are water bodies in 500m radial distance of the quarrying site. There are health issues like kidney failure, young gray in this area and informed to cancel this quarry meeting.

The District Collector:

As there were no person came forward to offer their views, the District Collector informed that permission is not granted to this quarry and this public hearing is conducted before grant of permission to this quarry and in case of any violation, that will be taken into consideration. Then, he thanked all.

With this, the meeting came to an end.

13.2.2023

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Madurai

13/2/23

District Collector
Madurai District

Enclosures:

1. Copy of press release (Public Notice Published in Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing, (Total pages 17 & 148 persons)
3. Copy of Audio & Video (DVD - Disc) of the public hearing proceedings.
4. Copy of petition received from the public.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கருங்காலக்குடி கிராமம், புலஎண்.619(P), தி/ள்.கே.இளையராஜா சாதாரண கற்கள் குவாரி மற்றும் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அய்யாப்பட்டி கிராமம், புலஎண்.63, தி/ள்.கே.இளையராஜா சாதாரண கற்கள் குவாரி திட்ட பணிகளுக்கு பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் 07/02/2023 அன்று காலை 11.00 மணியளவில் தி/ள்.எம்.என்.பி திருமண மகால், திருச்சி மெயின் ரோடு, பட்டமங்கலம்பட்டி விலக்கு, கருங்காலக்குடி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரங்கள்.

<u>பங்கேற்றோர்</u>

<u>திருவாளர்கள்.</u>

1.	மரு. எஸ். அனீஷ்சேகர்	மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை மாவட்டம்
2.	திவ்யான்ஷீ நிகாம்	உதவி ஆட்சியர் (பயிற்சி) மதுரை மாவட்டம்
3.	மரு. கே. ஃபிர்த்ஹவுஸ் பாத்திமா	வருவாய் கோட்டாட்சியர், மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம்
4.	ஆர்லியஸ் ரெபோனி	துணை காவல் கண்காணிப்பாளர் மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம்
5	கு.இராமராஜ்	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மதுரை மாவட்டம்
6	இர.வி. பத்மாஸனி	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மதுரை மாவட்டம்
7.	கோ. உஷா ராணி	உதவி பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மதுரை மாவட்டம்

8	தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள்	வருகை பதிவேட்டில் உள்ளபடி (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை

தி/ள். கே.இளையராஜா சாதாரண கற்கள் குவாரிகள் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர், துணை ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர், அரசு அலுவலர்கள், பொது மக்கள், பத்திரிக்கை நண்பர்கள், திட்ட ஆலோசகர், தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை அவர்கள் வரவேற்றார்,

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், புது தில்லி அவர்களால் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின் படி தி/ள். கே.இளையராஜா, புல எண். 619(P), கருங்காலக்குடி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் மற்றும் கே.இளையராஜா, புல எண். 63, அய்யாப்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள சாதாரண கற்கள் குவாரி குறித்து பொது மக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி டைம்ஸ் ஆப் இந்தியா" நாளிதழ்களில் 30/12/2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட இடங்களில் இத்திட்டங்கள் பற்றிய திட்ட விளக்க உரைகள் மற்றும் செயல்

திட்ட சுருக்க அறிக்கைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. இக்குவாரி திட்டம் குறித்து தங்களது கருத்துகளை அமைதியான முறையில் தெரியப்படுத்தலாம் என்றும் மற்றும் எழுத்து மூலமாகவும் தெரியப்படுத்தலாம் என்பது கேட்டுக் கொண்டார்.

திட்ட ஆலோசகரை திட்டத்தை பற்றி விளக்கவுரை ஆற்ற கேட்டுக் கொண்டார்

தொழில் நுட்ப விளக்கம், சுற்றுச்சூழல் ஆலோசகர்

சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள். கே.இளையராஜா சாதாரண கற்கள் குவாரி திட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

1.திரு. பரசுராமன், கருங்காலக்குடி :

பொது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இத்திட்டம் முக்கியமானது. இத்திட்டத்தினால் எந்த பிரச்சனையும் வராது. கருங்காலக்குடியில் இந்த தொழிலை நம்பி பல்லாயிரக்கணக்கான மக்கள் உள்ளார்கள். இக்குவாரி செயல்படுவதால் பாதிப்பு இருக்காது. ஊர் பேரூராட்சியாக வளர இத்திட்டம் வர வேண்டும் என்றார்.

2. திரு. வீரத்தமிழ்ச் செல்வன், பட்டமங்கலம்பட்டி :

குவாரிப் பணிகள் எங்களது ஊரில் தொன்றுதொட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அனைத்து கட்டுமானங்களும் உடைகல் வைத்து தான் கட்டிடம் கட்ட வேண்டும். உடைகல் இல்லை என்றால் கட்டிடங்களுக்கு ஆயுள் குறைவு. உடைகல் குவாரிகளால் மாசு ஏதும் ஏற்படாது. மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இப்பகுதி மேம்பட இத்திட்டம் வேண்டும் என்றார்.

3.திரு. பாலமுருகன், தம்பட்டப்பாறை :

இத்திட்டத்தினால் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்தார்.

4. திரு. எஸ். அன்பழகன், எஸ். மலம்பட்டி :

தான் படித்த பட்டதாரி என்றும் ஆரம்ப காலத்தில் விவசாயம் நம்பி மிகக்குறைந்த வருமானத்தில் கஷ்டப்பட்டதாக தெரிவித்தார். தற்போது இத்தகைய குவாரி திட்டங்களினால் கிராமங்களில் வளர்ச்சி இருக்கிறது என்றும் சுற்றுவட்ட கிராம இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு சிறிதளவு இருப்பினும் இது மாதிரியான பொருளாதார வளர்ச்சிப்பாதையை வரவேற்கிறோம் என தெரிவித்தார்.

5. திரு. உக்கிரபாண்டியன், எஸ். மலம்பட்டி :

10,000 குடும்பங்கள் வேலை இல்லாமல் உள்ளன. முன்பு கிராணைட் தொழில் இப்பகுதியில் இருந்தது. தற்போது இது மாதிரியான குவாரியினால் வேலை வாய்ப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் அனைவருக்கும் கிடைக்க வாய்ப்பு உள்ளதால் ஆதரவு தெரிவித்தார்.

6. திரு. இராஜேந்திரன், கம்பூர் :

இப்பகுதியில் புறம்போக்கு குவாரி 5 ஆண்டுகளாக இயங்கவில்லை. இது குறித்து அரசு அதிகாரிகளுக்கு மனு அளித்துள்ளோம். வாழ்வாதாரத்தை காக்க புறம் போக்கு குவாரிகள் அனைத்தையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

7. திரு. அண்ணாதுரை, மதுரை (ஆரப்பாளையம்) :

அய்யாபட்டி புல எண் 63ல் 0,74 ஹெக்டேர் பரப்பில் அமையவுள்ள தி/ள்.கே.இளையராஜா கருத்து கேட்பு கூட்டத்தில் 40 வகையான ஆவணங்களுக்கு பதிலாக 10 ஆவணங்கள் மட்டுமே வரைவு அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. வரும் காலங்களில் இது போன்ற தவறுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ள கூறினார். மேலும் வண்டிப்பாதைக்கென்னு 10மீ இடைவெளி விட வேண்டும் என சட்டத்தில் உள்ளது என்றும், கிராம புல வரைபடத்தில் வண்டிப்பாதை இருந்தும், இதைப்பற்றி அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை என தெரிவித்தார். கல்குவாரிக்கு சட்ட விரோதமாக அனுமதி.

ToRல் காற்று, மண், நீர், பல்லூயிர்களுக்கான ஆய்வுகள் 01/05/2021 வரை செய்ததாக சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளது என்றும் இத்திட்ட அறிக்கை சட்ட விரோதமானது என்றும் தெரிவித்தார்.

8. திரு. செல்வராஜ், கம்பூர் :

பெரியார் கால்வாய் திட்டம் இப்பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகவும், இங்கு கல்குவாரிகளால் எதிர்கால சந்ததிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் விவசாயத்தை காக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார், கனிம வள விதிகளை மீறி அனுமதி வழங்கப்படுவதாகவும், சட்ட விதிகளுக்குட்டு குவாரி தொழில் நடந்தால் பரவாயில்லை, வீடு, கண்மாய், குளம் போன்றவை கவனத்தில் கொள்ளாமல் அனுமதி வழங்குகிறார்கள் என குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளத்தில் வேறு கல்குவாரி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இருப்பதால் மாவட்ட ஆட்சித்தலைவர்,

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களிடம் மனு கொடுத்தோம். உடனே மாற்றிவிட்டார்கள்என்று கூறி நன்றி தெரிவித்தார்.

குவாரியை சுற்றி நீர்நிலைகள் நிறைய இருக்கிறது. கிராம வரைபடத்தில் அது தெளிவாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

ToRல் 01.03.2021 முதல் 01/05/2021 வரை காற்று, மண், நீர், பல்லூயிர்களுக்கான ஆய்வுகள் நடந்ததாக சுருக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 100 நாட்களுக்கு முன் செய்ததாக கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்தார்.

இக்குவாரி திட்டத்திற்கு அருகில் நீர்நிலை உள்ளது. 30 இணைப்பு ஆவணங்கள் இல்லை. எனவே, இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி தர வேண்டாம். மேலூர் பகுதியில் சட்ட விதிகளுக்கு உட்பட்டு கல்குவாரிகளுக்கு அனுமதி கொடுங்கள். சுற்றுச்சூழல் முக்கியம். குடும்பங்கள் நல்லா இருக்கணும்.

9.திரு. அசாருதீன், சமூக ஆர்வலர் சேக்கிப்பட்டி ஊராட்சி :

இந்த தொழில் தான் மக்களுக்கு வாழ்வாதாரம். இத்திட்டத்தில் மோசடிக்கு வாய்ப்பில்லை என்றும் குறைபாடுகளை அரசு சரிசெய்து அனுமதிக்கலாம் என தெரிவித்தார்.

10.திரு. தங்கம் அடைக்கன், சின்ன கற்பூரம்பட்டி :

இத்திட்டம் முறைகேடானது. குளம், வண்டிப்பாதை இருக்கிறது. அதை காட்டாமல் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இத்தொழிலினால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. 1% மக்கள் பலன் அடைகிறார்கள், 99% மக்களுக்கு பாதிப்பு என்றும், இப்பகுதியில் 99% மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பை நம்பியுள்ளார்கள். கருத்துக் கேட்பு கூட்டத்தை ரத்து செய்ய

வேண்டும். இப்பகுதியில் நிறைய பறவைகள் உள்ளன. அருகில் உள்ள அரிட்டாபட்டியில் பறவைகள் அதிகம். அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

11.திரு. சரவணன் வீரசூடாம்பட்டி :

இத்திட்டத்தினால் பொருளதார வளர்ச்சி பெருகும். கால்நடை வளர்ப்பு நன்றாக உள்ளது என்றும் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார்.

12. திரு. ஜீவா, கேசம்பட்டி :

விதியை மீறிய கல்குவாரியை மட்டுமே எதிர்க்கிறோம் என்றும் நிலத்தடி நீர் மட்டம் வெகு குறைவாக உள்ளதாக இப்பகுதிக்கு சிவப்பு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். கல் குவாரி செயல்பட்டால், பெரியார் கால்வாய் நீர் வந்தாலும் விவசாயம் செய்ய முடியாது இத்திட்டத்தால் 200 பேருக்கு வேலை, ஆனால் 10,000 பேருக்கு உணவு இருக்காது என்றும், 100 நாள் வேலை திட்டத்தை முறையாக செயல்படுத்த பொருளாதாரத்தை மேம்படுத்த கேட்டுக் கொண்டார். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். பல்லுயிர்கள் மற்றும் தேவாங்கு இனம் நிறை அழிந்து விட்டது என்றும், சட்டப்படி சரியாக இருந்தால் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

13.திரு. ரவி, சமூக ஆர்வலர், ஒத்தக்கடை:

சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாக நீர்நிலைகள், வண்டிபாதை அமைந்துள்ள இடத்தில் குவாரி திட்டமிடப்பட்டுள்ளது என்றும் விவசாயம், 100 நாள் வேலை திட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்றும், மலைகளை உடைத்து அகற்றினால் பூகம்பம், இயற்கை சீரழிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார். மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மேலும், எதிர்கால

சந்ததிகளுக்காக சிந்திக்க வேண்டும் என்றும், 500 மீட்டர் சுற்றளவி நீர்நிலைகள் இருக்கிறது. இப்பகுதியில் கிட்னி செயல் இழப்பு, இளநரை போன்ற பிரச்சனைகள் உள்ளது என்றும் தெரிவித்தார். குவாரி கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

இத்திட்டம் தொடர்பாக கருத்து கூற வேறு எவரும் முன்வராததால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இத்திட்டத்திற்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும் வழங்குவதற்கு முன்பு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது என்றும், விதி மீறல்கள் ஏதும் இருப்பின் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார்

13.2.2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
மதுரை

மாவட்ட ஆட்சித்தலைவர்
மதுரை மாவட்டம்

இணைப்பு:

1. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 17 மற்றும் 148 நபர்கள்)
3, பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.
4.திட்டத்தை பற்றி பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.